# ஸ்ரீ. உ.வே. மன்னார்குடி ஸ்வாமிக்கு நினைவஞ்ஜலி

சோகத்தூர் ராமாநுஜதாஸன், பெங்களூர்

மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. உ.வே. மன்னார்குடி ராஜகோபாலாசார்ய ஸ்வாமியின் திடீர் மறைவு ஸ்ரீவைஷ்ணவகுலத்துக்கே ஒரு ஈடுகட்ட இயலாத பேரிழப்பாகும்.

'कलौ खलु भविष्यन्ति नारायणपरायणाः' என்றும், 'நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய பாததூளி படுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே' என்றும் சொல்கிறபடியே புகழ்பெற்ற தென்னாட்டில் காவிரிக்கரையில் அவதரித்து நாராயணபராயணராய், மேன்மை மிக்க ஸதாசார்ய கடாக்ஷத்தினால் உபயவேதாந்த க்ரந்தங்களை முறையாக அதிகரித்து, 'अधीतमध्यापितमार्जितं यशः' என்னும்படி பலருக்குக் கற்பித்தும் ஸ்ரீஸன்னதி ஸம்ப்ரதாயத்தைத் தழைத்தோங்கச் செய்தது மிகவும் பாராட்டுக்குரியது.

'கார்கலந்த மேனியான் கைகலந்த ஆழியான் பார்கலந்த வல்வயிற்றான் பாம்பணையான் சீர்கலந்த சொல் நினைந்து போக்காரேல் சூழ்வினையினாழ்துயரை என் நினைந்து போக்குவர் இப்போது?' என்ற ஆழ்வார் ஸ்ரீஸூக்தியின்படி அடியேனறிந்தவரை கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக உபயவேதாந்த க்ரந்தசதுஷ்டயாதி காலக்ஷேபமே 'காலக்ஷேப'மாக - பொழுதுபோக்காக - இருந்த பெருமைக்கேற்ற உரிமையாளர் நம் ஸ்வாமி. உத்க்ரந்தங்களான ஶ்ருதப்ரகாஶிகை, தாத்பர்யசந்த்ரிகை, ந்யாயஸித்தாஞ்ஜனம், ஶததூஷணி, தத்த்வமுக்தாகலாபம், அதிகரணஸாராவளி போன்றவற்றையும் எளிதாக அறியும் வண்ணம் பலருக்கு ப்ரவசனம் செய்திருக்கிறார்.

தர்க்க, வ்யாகரண, மீமாம்ஸாதி ஸாமாந்ய ஶாஸ்த்ரங்களிலும், உபயவேதாந்தத்திலும் நிபுணரான ஆசார்யர்களால் தாமும் அந்நைபுண்யத்தைப் பெற்று, அதன் நற்பயனை அனைத்து ஶிஷ்யவர்க்கத்துக்கும் வழங்கிய வள்ளலாக ஸ்ரீமதஹோபிலமடத்தின் ஆஸ்தானவித்வான் பொறுப்பை வெகு திறம்பட நடத்தி வந்து அனைவரின் பாராட்டுக்கும் பெருமதிப்புக்கும் ஆளானவர். 'अष्टौ गुणाः पुरुषं दीपयन्ति', 'यो ह्येनं पुरुषं वेद देवा अपि न तं विदुः' என்றெல்லாம் வழங்கும்படி ஆத்மகுணங்களால் தான் பரமைகாந்திக்கு ஏற்றம் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். எளிமை, மேன்மை, இறையுணர்வு, கற்பிக்கும் திறன், புன்முறுவல் கூடிய திருமுகமண்டலம், பகவதாசார்ய பக்தி போன்ற நற்பண்புகளால் மிக விளங்கியவர்.

அடியேன் பெங்களூரிலேயே இருப்பதால் அடியேனுக்கு ஸ்வாமியிடம் அன்றாடம் நேரடி பரிசயம் அதிகமாக இல்லாதிருந்தும், பல ஸந்தர்ப்பங்களில் ஸ்ரீமடத்தில் ஸதஸ்களில், கோஷ்டிகளில், கருத்தரங்குகளில் பங்கேற்கும் பொழுதெல்லாம் மிக ஆத்மீயமாக அளவளாவுவார்.

முதன்முறையாக சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு திருப்பதி ஸம்ஸ்க்ருத வித்யாபீடத்தில் ஏற்படுத்தியிருந்த ப்ராபாகரமீமாம்ஸையில் ஶாலிகநாதன் என்பவர் இயற்றிய 'ப்ரகரணபஞ்சிகா' என்னும் க்ரந்தத்தை பதினைந்து நாட்களில் ஸ்ரீ. உ.வே. என்.எஸ்.ஆர். ஸ்வாமி போன்ற பல உயர் வித்வான்கள் கற்பித்தபோது ஸ்வாமியுடன் அடியேனும் கூடப் பங்கேற்க நேர்ந்து ஸ்வாமியின் தொடர்பு ஏற்பட்டது. அப்போது அவர் ஏதோ வங்கியில் பணியாற்றிக் கொண்டிருந்ததாகக் கேட்ட நினைவு. அதுமுதல் அவர் பரமபதிக்கும் வரை அத்தொடர்பு நீடித்து வளர்ந்தது.

வில்லிவலம் ஸ்ரீமதழகியசிங்கர் க்ருபையால் ஸ்ரீமடத்தின் ஆஸ்தானவித்வானாக நியமனம் ஏற்று பலருக்கு பல க்ரந்தங்களை பலமுறை காலக்ஷேபம் ஸாதித்து வந்து நம்முடை நம்பெருமானின் பெருவீடு பெற்று மகிழ்கிறார்.

*ஸ்ரீ நருஸிம்ஹப்ரியா வாயிலாகவும், மாலோல வித்வத் ஸதஸ் மூலமாகவும், பல ஶாஸ்த்ர வாக்யார்த்த கோஷ்டிகளிலும் அந்வயித்து ஸம்ப்ரதாய விஷயங்களை பரிமாறிக்கொண்டிருந்தார்.*

*2010ம் ஆண்டு வாக்கில் அடியேன் ஒருமுறை 'தார்க்ஷ்ய' என்னும் மத்திய அரசின் திட்டத்தின் கீழ் வேத, ஶாஸ்த்ர க்ரந்தவிஷயங்களை உயர்ந்த வித்வான்களின் வாயிலாக உபந்யஸிக்கச் செய்து பிற்காலத்தாருக்குப் பயன்பட உதவவேண்டி கணினி வலைத்தளத்தில் சேர்த்திடத் தொடங்கியபொழுது மீமாம்ஸை விஷயமாக நம் ஸ்வாமியை ப்ரார்த்தித்தேன். அவரும் மிகவும் உற்சாகத்துடன் ஒப்புக் கொண்டும் பல காரணங்களால் அது நேராமலே போயிற்று. ஸ்வாமி பரமபதிக்கும் முன்னர் கூட ஞாயிற்றுக்கிழமை தொலைபேசியில் பேசும் போதும், 'அவஶ்யம் சீக்கிரம் முடித்து விடலாம்' என்றே ஸாதித்தார். அந்தோ! எம்பெருமான் அநுகூலமாக ஸங்கல்பிக்கவில்லையே!*

*2018ம் ஆண்டு பெங்களூரில் அடியோங்கள் ஆறு நாட்களில் ஸ்வாமி ஸ்ரீதேஶிகனின் 'ஸேஶ்வரமீமாம்ஸை' க்ரந்தத்தை பயிலரங்கில் பாடமாக நடத்தினபொழுது நம் ஸ்வாமிதான் பரமக்ருபையுடன் எழுந்தருளி முதல் அதிகரணத்தைக் கற்பித்தார்.*

*எம்பெருமானாரின் ஆயிரமாவது திருநக்ஷத்ரம் மற்றும் ஸ்வாமி ஸ்ரீதேஶிகனின் 750வது திருநக்ஷத்ர ஸந்தர்ப்பத்தில் நாட்டின் சேலையூர், திருவல்லிக்கேணி, ஸ்ரீரங்கம், திருவுள்ளூர், கல்யாணபுரம், பெங்களூர், மைஸூர், ஸத்யாகாலம், திருவயிந்திரபுரம், ஹைதராபாத், அஹோபிலம், செம்பூர், திருவனந்தபுரம், போன்ற பலவிடங்களில் பல நிகழ்ச்சிகளில் பங்கேற்று திறம்பட நயமாக உபந்யஸித்து, வாக்யார்த்தங்கள் ஸாதித்து பக்தவர்க்கங்களை மிகவும் மகிழ்வித்திருக்கிறார்.*

*பம்பாயில் செம்பூர் ஸ்ரீமடத்தில் ஸ்வாமிக்கு ஸம்மானம் அளிக்கப்பட்ட ஸந்தர்ப்பங்களிலும் அவருடைய உயர்ந்த கருத்துக்கள், ஸன்னதி ஸம்ப்ரதாயத்தை தழைத்தோங்கச் செய்யப் பாரிப்பு, பல காலக்ஷேப வித்யார்த்திகளை நமது மதுராந்தக பாடஶாலை மூலமாக ஸாமாந்ய ஶாஸ்த்ரத்திலும் ஶிரோமணி பட்டம் பெற உதவியது, நவீனக் கருவிகளின் உதவியைக் கொண்டும் உயர்ந்த முறையில் போதனம் செய்தல் குறித்து ஆராய்ச்சி போன்றவை பலவகைகளில் ஸ்ரீமடத்தின் எழுச்சிக்கு வழிவகுக்கின்றன.*

'यश्च व्याकुरुते वाचं यश्च मीमांसतेऽध्वरम् । तावुभौ पुण्यकर्माणौ पङ्क्तिपावनपावनौ ॥' *என்றபடி மீமாம்ஸை அறிந்த வல்லுனர்கள் மிகவும் துர்லபமாக இருப்பதால் ஸ்வாமியின் பாண்டித்யம் மிக ஆவஶ்யகமானது. அடியேனிடம் கூட மிக அனுக்ரஹத்துடன் ஸ்ரீபாஷ்யத்தில்* 'तद्गुणसंविज्ञान-बहुव्रीहि', 'कर्मणि षष्ठीविचारம்' *போன்ற சில வ்யாகரணவிஷயங்களைப் பற்றிச் சொல்லச்சொல்லிக் கேட்டு ஆனந்தித்திருக்கிறார்.*

'संयोगा विप्रयोगान्ताः', 'किं तद्येनात्र तुष्यति' *என்றபடி நன்னாட்களை நினைந்திருந்தே சிரமம் தீரப் ப்ராப்தமாயுள்ளது.*